**வோட்டர்ஸ் ஏஜ் ரிக்கிரியேஷன் கம்பனி - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வோட்டர்ஸ் ஏஜ் ரிக்கிரியேஷன் கம்பனியின் (''கம்பனி'') 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுஇ உரிமை மூலதன மாற்றக் கூற்று, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள் பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த 14 மாதங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ் அறிக்கையில் காணப்படுகின்றன.

இவ் அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினால் எழும் தாக்கங்களைத் தவிர கம்பனியின் 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த 14 மாதங்களுக்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயமாகவும் தென்படும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப (இ.க.நி) நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இவ் அறிக்கையின் நிதிக்கூற்று கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றிதழ் போதியதும் உசிதமானதுமானவை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு ஏற்ப தயாரிக்கப்படுவதையும் நியாயபூர்வமாக சமர்ப்பிக்கப்படுவதையும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடியவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானிப்பது என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்து இயங்குவதற்கான ஆற்றலைததீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன் கம்பனியைக் கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது வேறு மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாட்டை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலே ஒழிய தொடர்ந்து இயங்கும் அடிப்படையில் கணக்கீட்டைப் பேணுவதும் கம்பனி தொடர்ச்சியாக இயங்குதல் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் தொடர்பான பொறுப்புக்களைத் தொடர்புடைய தரப்பினர் மேற்கொள்வர்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான முறையான ஏடுகளும் பதிவேடுகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.4 நிதிக்கூற்று கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படும் போதியளவு தவறான கூற்றுக்கள் அற்றன எனும் நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் அறிக்கையை சமர்ப்பித்தல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தல் ஆகும். எனினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்கையில் அது எல்லாச் சந்தர்ப்பத்திலும் போதியளவு தவறற்ற கூற்றுக்களை வெளிப்படுத்துகின்றது என உறுதிப்படுத்தப்பட முடியாததாகும். மோசடிகளும் தவறுகளும் தனியாக அல்லது கூட்டாக தாக்கமளிப்பதால் போதியளவு தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். ஆகவே இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களில் தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழிற்துறைப் பின்னனியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்இ

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பிடும் போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏநபடக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்த்துக்கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச்சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்துக்கான அடிப்படை ஆகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் ஏற்படும் தாக்கம் பிரபலமாவதால் தவறான கூட்டிணைவு போலி ஆவணற்களைத் தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைத் தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு கருதாத போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறான கணக்காய்வு நடவடிக்கைகளைத் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக உணரப்பட்டது.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமை காரணமாக கம்பனி தொடர்ந்தியங்குவதில் போதியளவு நிச்சயமற்ற தன்மையுள்ளதா என்பது சம்பந்தமாகப் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றின் அடிப்படையில் கணக்கீடு தொடர்பாக நிறுவனம் தொடர்ந்து இயங்கும் அடிப்படை தீர்மானிக்கப்படும். போதுமான நிச்சயமின்மை இருப்பதாக தான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமாக உள்ள எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும், அவ்வாறு இல்லையெனில் எனது அபிப்பிராயம் வரையறை செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்குவது இல்லாது போகலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

போதுமானவரை அல்லது தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பரிசீலிக்கப்படும் விதத்தில் கணக்காய்வின் நோக்கெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் சம்பந்தமாகப் பார்க்குமிடத்துஇ கம்பனியின் பணிகளைத் தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யும் விதத்தில் அதன் கட்டமைப்பு முறைமைஇ நடைமுறை ஏடுகளும் பதிவேடுகளும்இ அறிக்கைகள்இ ஏனைய ஆவணங்கள் என்பன முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும் அவ்வாறான முறைமைஇ நடைமுறைஇ ஏடுகளும் பதிவேடுகளும் பயனுள்ளவாறு பேணப்படுகின்றனவா என்றும்இ

- ஏதாவது தொடர்புடைய எழுத்துமூலச் சட்டம் அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும்இ

- குறித்த அதிகாரம்இ கடமை மற்றும் பணிகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும்இ

- வளங்களைச் சிக்கனமாகவும்இ வினைத்திறனுடனும் பயனுள்ளவாறும் காலப்பகுதியின் போது குறித்த சட்டங்கள் விதிகள் என்பவற்றிற்கேற்பவும் கொள்வனவு செய்து பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஓடர்ஸ் எக்வடிக் கழகத்திற்காக கம்பனி செலுத்த வேண்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரிப்பொறுப்பாக நிதக்கூற்றில் ரூபா 99.12 மில்லியன் வரை காணப்பட்டது. எவ்வாறாயினும் செலுத்த வேண்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பாக பேணிச் செல்லப்படும் சட்ட நடவடிக்கை தொடர்பாக வெளிப்படுத்தப்படவில்லை. | அவதானத்துடன் இணங்குவதாக. | தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பிரதான மதிப்பீட்டாளர் ஊடாக மேற்கொண்ட ஆதன மதிப்பீட்டின் பிரகாரம் ஓடர்ஸ் எக்வடிக் கழகத்திற்கு குத்தகையாக 2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்காக ரூபா 14,600,000 மில்லியனும் 80 கிலப் கழகத்திற்காக 2021 ஆண்டிற்காக ரூபா 4,000,000 உம் ஆக கூட்டுத்தொகை ரூபா 18,600,000 இனை செலுத்துமாறு அறிவித்திருந்த போதும் அந்நிறுவனத்தினால் ரூபா 3,777,419 மாத்திரம் செலுத்தியுள்ளமை மற்றும் அப்பெறுமதி மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்ததன் மூலம் மீளாய்வாண்டில் குத்தகை செலவினம் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 14,822,581 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ஓடர்ஸ் எக்வடிக் கழகம் மற்றும் 80 கிலப் கழகம் மாதாந்தம் பெற்றுக் கொள்ளும் உணவுப் பானங்கள் விற்பனை மற்றும் அங்கத்துவக் கட்டணம் ஊடாக ஈட்டிக்கொண்ட வருமானத்தினுள் பிரதான மதிப்பீட்டாளரினால் உத்தேச மாதாந்த மதிப்பீட்டு தொகையான முறையே ரூபா 4,000,000 மற்றும் ரூபா 2,000,000 ஆன தொகையை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு தீர்க்க போதாதென வோர்டஸ் எஜ் ரிக்ரியேஷன் லிமிடட் கம்பனியினால் நகர | செலவுகளை உரியாவாறு இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும. |

| | | | |
|---|---|---|---|
| | | அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவித்துள்ளதுடன், அவ் அறிவித்தலிற்கு இணங்க நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பிரதான மதிப்பீட்டாளரிற்கு ஓடர்ஸ் எக்வடிக் கழகத்தின் மாதாந்த மதிப்பீட்டுப் பெறுமதியை மீள் பரிசீலனை செய்து நியாயமான கட்டணமொன்றை முன்வைக்கக் கோரியுள்ளது. 80 கிலப் கழகத்தினதும் மாதாந்த பெறுமதியை குறைக்க கோரிக்கை ஒன்றை நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் வோர்டஸ் எஜ் ரிக்ரியேஷன் லிமிடட் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட மதிப்பீடுகளிற்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் கீழ் வோர்டஸ் எஜ் ரிக்ரியேஷன் லிமிடட் கம்பனியினால் ஓடர்ஸ் எக்வடிக் கழகம் மற்றும் 80 கிலப் கழகங்களின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக மாதாத்திற்கு நில வாடகையாக முறையே ரூபா 200,000 மற்றும் ரூபா 500,000 தொகையை கணக்கீடு செய்துள்ளது. | |
| (இ) | கணக்கீட்டுக் காலத்திற்காக நிலையான சொத்து பெறுமானத் தேய்வு ரூபா 1.63 மில்லியன் குறைத்துக் காட்டப்பட்டதன் காரணமாக வரிக்கு முன்னரான நட்டம் அப்பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2022 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த நிதிக்கூற்றுக்களில் தேவையான செம்மையாக்கல்களை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக. | சரியாக குறித்த கணக்கீட்டை மேற்கொண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | 80 கழகத்துடன் உடன்படிக்கைக்கு உட்படாத போதும் 2022 பெப்ரவாரி 25 திகதியில் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் மீளாய்வுக் காலப்பகுதிக்கு நிதிக்கூற்று தயாரிக்கும் போது அவன்ஹலயின் வருமானம் மற்றும் ஏனையை வருமானம் ரூபா 16.77 மில்லியன் மொத்த செலவினம் | 80 கிலப் கழகம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை இனங்கண்டு அதன் சட்டதீதியான பொறுப்புக்களை எத்தரப்பினரால் ஏற்க வெண்டுமென, | உரிய அங்கீகாரம் மற்றும் இணக்கப்பாடுகள் உள்ளடங்களாக செலவுகளை மேற்கொள்ள வேண்டியதுடன் அவ் அரச சொத்துக்களை |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 20.94 மில்லியன் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக கழகம் ரூபா 3.92 மில்லியன் நட்டமொன்றை அடைந்திருந்தது. எவ்வாறாயினும் குறித்த காலப்பகுதிக்கான அங்கத்துவக் கட்டணம் (அண்ணளவாக 420 அங்கத்தவர்கள்) வருமானமாக கருதப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், 80 கிலப் கழகத்தில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் கம்பனியின் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. கழகத்தின் சொத்துக்களை பயன்படுத்துவதற்காக வாடகை செலுத்துமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்திருந்தது. மேலும், கழகத்தை சுவீகரிக்க முன்னர் நகர அபிவிருத்தி அதிகாரசபை கட்டிட திருத்தம் சமயலறை உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை வழங்க ரூபா 411.42 மில்லியன் செலவிட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டது. அதனால் கழகத்தின் வருமானம் மற்றும் செலவுகளை ஒன்றிணைக்க ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படையொன்றை பின்பற்றி இருக்காததுடன் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்களை கம்பனியினால் மேற்கொள்ளவில்லை என அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் 80 கிலப் கழகத்தை நடாத்திச் செல்லும் நிபந்தனைகள் மற்றும் அது தொடர்பான நகர அபிவிருத்தி அதிகாரசபை, வோர்டஸ் எஜ் ரிக்ரியோஷன் லிமிடட் மற்றும் 80 கிலப் கழகத்திற்கு இடையில் கலந்துரையாடல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அக் கலந்துரையாடலின் முன்னேற்றத்தின் மீது தரப்பினரிற்கிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அம்முத்தரப்பினரின் இணக்கப்பாட்டிற்கு வரும்வரை அச்சொத்துக்கள் தொடர்பாக வோர்டஸ் எஜ் ரிக்ரியோஷன் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கும் இயலுமை இல்லாததென. | உரியவாறு கணக்கீடு செய்ய பொறுப்புவாய்ந்த தரப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | கம்பனிக்கு சொந்தமின்றிய வளவில் நிறுத்தி வைக்கப்ட்டிருந்த தொலை மோட்டார் படகொன்று (துநவ முநல) மோட்டார் வாகனமொன்றாக ரூபா 2 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டள்ளதாக அவதானிக்கப்பட்டது. மேலும், அதை பயன்படுத்தாது பயனற்று நிறுத்தி வைத்திருந்ததுடன் மீளாய்வு காலப்பகுதியினுள் பெறுமான தேய்வாக ரூபா 16,607 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஓடர்ஸ் எக்வடிக் கழகத்தை வோர்டஸ் எஜ் ரிக்ரியேஷன் லிமிடட் கம்பனிக்கு ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் நிலையான சொத்தாக வகைப்படுத்தி ஒப்படைத்திருந்த போதும் இந்த (துநவ முநல) இயந்திரத்தை பயன்படுத்த தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஓடர்ஸ் எக்வடிக் கழக வளவில் அமைக்கப்படவில்லை. இவ் இயந்திரம் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கையொன்றை எடுக்குமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபையை அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவன வளவில் உள்ள சொத்துக்கள் தொடர்பாக கம்பனி பொறுப்பேற்க வேண்டும். |

### 1.5.2 அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உத்தேச நகர அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக அக்காணியை சுவீகரிப்பதற்காக அமைச்சரவை அமைச்சர்களின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள 2020 ஒக்டோபர் 20 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உள்ளடங்கும் ஐம்பத்தொறு காணிகளில் மூன்று காணிகள் ஆதன மறுசீரமைப்பு செய்து பொது மக்களுக்கு திறந்து வைப்பதற்காக சுவீகரிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், 2021 ஜுன் 06 திகதிய முத்தரப்பு உடன்படிக்கைக்கு அமைய ஒடர்ஸ் எக்வடிக்ஸ் கழகத்தின் சொத்துக்களை செயற்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதனை கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், முத்தரப்பு வசதிகள் பெற்றுக் கொள்ளும் உடன்படிக்கையில் 3.1 பிரிவிற்கு அமைய, ஒடர்ஸ் எக்வடிக்ஸ் கழகத்தின் அங்கத்தவர்களுக்கு, அவர்களின் விருந்தாளிகளிற்கு மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரமுடைய நபர்களுக்கு இச்சொத்துக்களை பயன்படுத்தலை மட்டுப்படுத்தியுள்ளது. மேலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் 80 கிலப் கழகத்தின் கட்டிட திருத்த மற்றும் உபகரண கொள்வனவிற்கு ரூபா 411.42 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கழகங்களின் சொத்துக்கள் அங்கத்தவர்களால் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. இந்த கழகங்கள் இரண்டையும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைப்பதன் நோக்கமானது அதனை அபிவிருத்தி செய்து பொது மக்களுக்கு திறந்து வைக்கவான போதும், அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் ஏற்பாடுகளிற்கு மாற்றமாக அங்கத்தவர்களுக்கு மாத்திரம் நலன்கள் கிடைக்கும் வகையில் கழகத்தை நடாத்திச் செல்வதாக அவதானிக்கப்பட்டது.<br>கழகத்தை பொது மக்களுக்கு திறந்து வைப்பதற்காக எவ்வித திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 80 கிலப் கழகம் மற்றும் வோடர்ஸ் எக்வடிக் கழகம் தற்போது முக்கியமாக அதன் அங்கத்தவர்களுக்கு மாத்திரம் திறக்கப்பட்டுள்ளது. எனினும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் 80 கிலப் கழகத்திற்கு அனுப்பிய 2020/10/20 திகதிய கடிதம் பிரகாரம் இக்கழகம் இலக்கம் 20/1607/306/035 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் 2022/10/01 திகதி முதல் பொது மக்களுக்கு திறந்து வைக்குமாறு உத்தேசிக்கப்பட்டுள்ளது, அவ்வாறே இவ்வாறான உத்தேசமொன்று வோடர்ஸ் எக்வடிக் கழகத்திற்கு நகர அபிவித்தி அதிகாரசபையினால் அனுப்புவதாகவும் வோடர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் லிமிடட் இற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் பீஈடீ.∴.12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| | 8.2.3 பந்தி | வோடர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனியை உருவாக்க குறித்த அமைச்சினூடாக நிதி அமைச்சின் அங்கீகாரம் மற்றும் பரிந்துரை பெரப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது வரிசை அமைச்சின் அங்கீகாரத்தின் பிரகாரம் மாத்திரம் வோடர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனி உருவாக்கப்பட்டிருந்தது. | வோடர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனி 202-11-12 திகதி உருவாக்கப்பட்டதுடன் அவ் உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்தது நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் சுவீகரிக்கப்பட்ட ஓடர்ஸ் எக்வடிக் மற்றும் 80 கிலப் எனும் கழகங்களின் இயக்க மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன் கொண்டுசெல்லவாகும்..மேற் குறிப்பிட்ட கம்பனி வோடஸ் எஜ் நிறுவனத்தின் முற்றிலும் துணைக் கம்பனியொன்றாக பதிவு செய்ய நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வீடமைப்பு அமைச்சினால் எழுத்து மூலம் அறிவித்ததுடன் அக் கம்பனிக்கான முதலாவது பணிப்பாளர் சபையும் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வீடமைப்பு அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்டது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 இன் 842 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கை பிரகாரம் கழகத்தினால் பயன்படுத்தும் அனைத்து நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்றை பேணிச் சென்றிருக்கவில்லை. | ஓடர்ஸ் எக்வடிக் கழகத்தில் உள்ள நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன் பேணிச் செல்வதுடன் மற்றும் 80 ஊடரடி நிலையான சொத்துக்களிலான சட்ட ரிதியான உரிமை தொடர்பாக இணக்கப்பாடொன்று இல்லாததால் கம்பனியினால் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிலையான சொத்துப் பதிவேடொன்றை பேணிச் செல்லாததுடன் சட்ட ரீதியான இணக்கப்பாட்டின் பின்னர் அப் பதிவேட்டை பேணிச் செல்ல மற்றும் நாளாதுவரையாக்க எதிர்பார்க்கிறேன். | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

2020 ஒக்டோபர் 21 திகதி செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்த மேற்குறிப்பிட்ட கம்பனியின் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2021 மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா 11,000,061 நட்டமொன்றானது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | வோடர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனி எனும் சட்ட ரீதியன தனிமனத உரிமையுள்ள கம்பனி சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கம்பனியொன்றாவதுடன் அதன் நிதி செயற்பாடு மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக உரிய பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறாயினும், கம்பனி கம்பனி விஞ்ஞாபனததின் (ஆ) 1 மற்றும் 2 இல் கம்பனியின் நோக்கமாக குறிப்பிட்டுள்ள உள்நாட்டு மற்றும் சர்வதேச விளையாட்டுக்களை நடாத்திச் செல்லல், உணவகம் மற்றும் மாடிவீடு மற்றும் தங்குமிடவசதி வழங்குதல், உணவுப் பானம் வழங்குதல் உள்ளிட்ட திருமண விழா, மாநாடு மட்டும் கூட்டங்கள் நடாத்திச் செல்லல் உள்ளிட்ட ஏனைய நடவடிக்கைகள் மற்றும் கம்பனியின் இவ்வாறான நோக்கங்களை அடைந்து கொள்ள காணி, கட்டிடம் மற்றும் ஏனைய வியாபாரங்களில் முதலீடு செய்தல் என்பன குறிப்பிடப்பட்டிருந்த போதும் ஒடர்ஸ் எக்வடிக் கழக வளவில் உள்ள சொத்துக்கள் குறைபயன்பாட்டுடன் நிலவுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் விபரம் பின்வருமாறு ஆகும். | | |
| (அ) | ஒடர்ஸ் எக்வடிக் கழக வளவில் உள்ள கூடைப் பந்து விளையாட்டு மைதானத்திற்காக 2020 செப்டம்பர் முதல் 2021 திசெம்பர் வரை ரூபா 175,790 அளவு ஆகக் குறைந்த வருமானமொன்று ஈட்டப்பட்டிருந்ததுடன் விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள செலவில் | இக் காலத்தினுள் நாட்டில் ஊழனை 19 தொற்று பரவுவதனால் குறைந்த வருமானம் கிடைக்க பிரதான காரணமாக இருந்தது. நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் ஒடர்ஸ் | கம்பனிக்கு சொந்தமான சொத்துக்களை பயனுறுதிமிக்கதாக உச்ச வினைத்திறனை பெற்றுக் |

| | | | |
|---|---|---|---|
| | நவீனமயமாக்கி, தேசிய கூடைப் பந்து குழுவின் பயிற்சிக்காக பயன்படுத்த விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விசாரிக்கப்பட்டிருந்தது. எனினும் 2021 செப்டம்பர் 27 திகதிய இலக்கம் 53/2/29 கொண்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் பிரகாரம் ஒடர்ஸ் எக்வடிக் கழக வளவை அபிவிருத்தி செய்வதற்குரியதாக அபிவிருத்தி உத்தேசங்களை பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் அதிகாரசபையினால் நடாத்திக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 2022 ஆகஸ்ட் 17 திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது எவ்வித அபிவிருத்தியும் செய்யப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | எக்வடிக் கழக அபிவிருத்தி உத்தேசங்களை கோர தீர்மானித்திருந்த போதும் அதன் தற்போதைய முன்னேற்றம் தொடர்பாக வோடர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் நிறுவனத்திற்கு அறவூட்டி இல்லாததுடன் எனினும் மேற்குறித்த செயற்பாட்டின் மீது கூடைப் பந்து விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன. இவ் அபிவிருத்தி செயற்பாடு தொடர்பான இறுதி தீர்மானம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயத்தினால் எடுக்கப்படும். | கொள்ளும் வகையில் பயன்படுத்த நடடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | டெனிஸ் விளையாட்டரங்கின் அருகில் 2 பர்சஸ் அளவான காணித் துண்டு எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காது கைவிடப்பட்டு இருப்பதாக அவதானிக்கப்பட்டது. அக்காணித் துண்டு நிறுவனத்திற்கு சொந்தமான ஒன்றான போதும் டெனிஸ் விளையாட்டரங்கின் மதிலினால் வேறாகி விளைவற்று காணப்பட்டது. | நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் எதிர்காலத்தில் செயற்படுத்தவுள்ள உத்தேச கலப்பு அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக இட்டெனிஸ் மைதானம் மற்றும் அருகில் அமைந்துள்ள 2 பர்சஸ் காணி உள்ளடங்குமென்பது எமது உணர்வாகும். அதனால் உத்தேச கலப்பு அபிவிருத்தி கருத்திட்டம் தொடர்பாக சாத்தியப்பாட்டு மதிப்பீட்டின் போது மேற்குறிப்பிட்ட காணி தொடர்பாகவும் கவனிக்குமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபையை அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனியின் சொத்துக்களை இலாபம் ஈட்டும் வகையில் பயன்படுத்த வேண்டும். |
| (இ) | ஒடர்ஸ் எக்வடிக் கழகத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சுவீகரிக்க முன்னர் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த மேசை டெனிஸ் அரங்கின் கீழ் மாடி எவ்வித செயற்பாடுகளிற்கும் பயன்படுத்தாது நிறுவனத்தின் பழுதடைந்த பாகங்கள் குவிக்கப்பட்டு விளைவற்று காணப்படுவதாக பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | கழகத்தின் நிர்வாக மற்றும் இயக்க செயற்பாடுகள் மற்றும் அந்த நிர்வாகத்திற்கு தேவையான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை கட்டுப்படுத்தல் மற்றும் நடாத்திச் செல்லுவதற்கு மாத்திரம் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது. எனினும் ஒடர்ஸ் எக்வடிக் கழகத்தின் கட்டிட நிர்மாணத்திற்காக மேற்கொள்ள வேண்டிய மூலதன செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் | கம்பனி விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள கம்பனி உருவாக்கப்படும் நோக்கங்களிற்கு இணங்க கம்பனியின் நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதனை கம்பனி மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அனுசரணையுடன் இடபெற வேண்டுமென்பது எமது உணர்வாகும். கழகத்தில் காணப்படும் இடவசதி குறைவாகையால் இவ்வளவில் தற்போது நிறுவனத்தின் பழுதடைந்த பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. அப் பழுதடைந்த பொருட்களை அங்கிருந்து அகற்ற எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | ஒடர்ஸ் எக்வடிக் கழகத்தின் நீச்சல் தடாகங்களிலிருந்து 2020 செப்டம்பர் 01 திகதி முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலத்திற்கு வருமானமாக ரூபா 167,440 தொகை கிடைத்திருந்ததுடன் மேற்கொண்ட மின் செலவு மாத்திரம் ரூபா 564,682 தொகையானது. அதன் பிரகாரம் நீச்சல் தடாகங்களும் குறை பயன்பாட்டுடன் நிலவின. | கழகத்தின் நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் மாத்திரம் செய்யப்படுவதுடன் கழகத்திற்காக செய்ய வேண்டிய மூலதன ரீதியான செலவுகள் மேற்கொள்ள வோடர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனி பொறுப்பற்றது. மூலதன செலவுகள் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் இறுதி அதிகாரி நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆகும். மின்சார நுகர்வு அதிகரித்தமை செயற்பாட்டு செலவினம் அதிகரிக்க தாக்கம் செலுத்துவதுடன் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் தொடர்பாக அல்லது திருத்தங்கள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபையை அறிவூட்ட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனி விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள கம்பனி உருவாக்கப்படும் நோக்கங்களிற்கு இணங்க கம்பனியின் நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதனை கம்பனி மேற்கொள்ள வேண்டும். |
| (உ) | நிறுவனத்தில் காணப்படும் 1680 வர்க்க அடி குளிரூட்டப்பட்ட மற்றும் 1692 வர்க்க அடி குளிரூட்டப்படாத விழா மண்டபங்கள் இரண்டை மேம்படுத்தி விழாக்களிற்காக வாடகை அடிப்படையில் வழங்கி உச்ச வருமானமொன்றை ஈட்ட முடியுமான போதும் மீளாய்வாண்டினுள் இவ்வளவை 46 விழாகளிற்கு வழங்கி ரூபா 349,500 தொகை மாத்திரம் ஈட்டப்பட்டிருந்தது. எனினும் இவ் வளவை வாடகை அடிப்படையில் வழங்க விழா மண்டபத்திற்கு தேவைாயன வசதிகள் (சுகாதார வசதிகள், அலங்காரம, தளவாடங்கள்) இல்லையென அவதானிக்கப்பட்டது. | ஒடர்ஸ் எக்வடிக் கழகத்தில் காணப்படும் குளிரூட்டப்பட்ட மற்றும் குளிரூட்டப்படாத விழா மண்டபங்களில காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக, இக் கழகம் வோட்டர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனிக்கு செயற்பாட்டு நடவடிக்கைகளை ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையை அறிவூட்டியதுடன் மறுசீரமைப்பு தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு மீண்டும் முன்வைக்க எதிர்பார்க்கிறேன். | கம்பனி விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள கம்பனி உருவாக்கப்படும் நோக்கங்களிற்கு இணங்க கம்பனியின் நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதனை கம்பனி மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நிறுவனத்தின் கட்டிடங்களை பாதுகாப்பான முறையில் பயன்படுத்த இயலுமாக இருக்காததுடன் கட்டிடத்திற்காக பிரதான மின்சார வழங்கல் (ஆயமை ீயநெட டீழயசன) மற்றும் மின்சாரம் வழங்கும் தொகுதி அதிக பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | வோட்டர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனி நிறுவனத்தினால் ஒடர்ஸ் எக்வடிக் கழகத்தில் நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை மாத்திரம் மேற்கொள்வதுடன் கழகத்திற்காக செய்ய வேண்டிய மூலதன ரீதயான செலவுகளை செய்ய கம்பனியின் கடப்பாடொன்று இல்லை. கழக வளவில் மேற்கொள்ள வேண்டிய மூலதன ரீதியான மாற்றங்கள் மற்றும் செலவுகள் தொடர்பாக ஒடர்ஸ் எக்வடிக் கழகத்தில் உரிமையை கொண்டுள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ள வேண்டியதுடன் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்படும் மாற்றங்கள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபையை அறிவூட்ட தேவையான நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கிறேன். | கம்பனி விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள கம்பனி உருவாக்கப்படும் நோக்கங்களிற்கு இணங்க கம்பனியின் நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதனை கம்பனி மேற்கொள்ள வேண்டும். |
| (எ) | கழகமொன்றாக நடாத்திச் செல்லப்படும் ஒடர்ஸ் எக்வடிக் கழகத்தில் அங்கத்தவர்களிடமிருந்து அங்கத்துவ கட்டணமாக 2021 ஆண்டிற்காக ரூபா 18,288,460 ஆன வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன் அவ் 4,271 அங்கத்தவர்கள் மற்றும் ஆளணியினர் பயன்படுத்தும் ஓய்வு மண்டபம், குளியலறை மற்றும் மலசலகூடம் பயன்படுத்த முடியாத நிலையிற்கு உபகரணங்கள் மற்றும் இடங்கள் உடைந்திருந்ததாக பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | ஒடர்ஸ் எக்வடிக் கழகத்தினை வோட்டர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனிக்கு ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி பங்களிப்புடன் கழகத்தை நடாத்திச் செல்ல முக்கிய திருத்தங்களை மேற்கொண்டதுடன் மேலும் மேற்கொள்ள வேண்டிய சிறிய திருத்தங்களை பூர்த்தி செய்ய தேவையான செயற்பாடுகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | கம்பனி விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள கம்பனி உருவாக்கப்படும் நோக்கங்களிற்கு இணங்க கம்பனியின் நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதனை கம்பனி மேற்கொள்ள வேண்டும். |
| (ஏ) | கொழுப்பு 07 சரண மாவத்தையில் 1.163 ஹெக்டயரான அளவை கொண்ட ஒடர்ஸ் எக்வடிக் கழகத்தினை நடாத்திச் செல்லும் காணி மற்றும் ஆதனங்களை மிக்க ஆக்கபூர்வமாக மற்றும் மிக்க அலங்காரமாக விளையாட்டிற்கு முன்னுரிமை வழங்கி நடாத்திச் செல்ல இயலுமான இடமொன்றான போதும் குறைபயன்பாட்டுடன் நிலவுவதால் அரச சொத்துக்கள் உரிய பராமரிப்பு இன்றி வினைத்திறனின்றி காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | ஒடர்ஸ் எக்வடிக் கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய அனைத்து மூலதன ரீதியான மாற்றங்கள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினை அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உத்தேச கலப்பு அபிவிருத்தி கருத்திட்டம் காரணமாக கழக வளவில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தற்காலிகமாக | கம்பனி உருவாக்கப்படும் நோக்கங்கத்தினை இனங்கண்டு அதன் பிரகாரம் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

தாமதித்துள்ளதென்பது எனது உணர்வாகும். அத் தீரமானம் எடுக்கும் தாமதத்தின் மீது நிறுவனத்தினால் ஈட்ட முடியுமாகவுள்ள வருமானம் ஓரளவு குறைவு காணப்பட முடியுமென்பதும் எனது உணர்வாகும்.

### 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியினால் 2021 ஆண்டினுள் ரூபா 170.965 மில்லியனான வேலைகள் மற்றும் வழங்கல்களை பெறுகை செய்திருந்தது. எனினும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2(அ),(ஆ) மற்றும் (இ) பந்திகள் பிரகாரம் கம்பனியினால் முறையான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வோட்டர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனி, ஒடர்ஸ் எக்வடிக் கழகம் மற்றும் 80 கிளப் கழக நிர்வாக மற்றும் செய்ற்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளும் பொறுப்பை ஏற்றதுடன் அதற்கான மூலதன மற்றும் ஏனைய செலவுகள் இது வரை நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனால் 2021 ஆண்டினுள் 80 கிளப் கழகமானது நிறுவனத்திற்காக ரூபா 170.965 மில்லியன் வேலைகள் மற்றும் வழங்கல்களை வோட்டர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனி ஊடாக நகர அபிவிருத்தி அதிபாரசபையிற்காக செயற்படுத்தியதுடன் அதற்காக தொடர்புபடும் பெறுகைகள் செயற்பாடு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வழிகாட்டி மற்றும் பங்களிப்பின் மீது மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே எதிர்காலத்தில் வோட்டர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனிக்காக பெறுகைகள் திட்டமொன்று மற்றும் குழு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் நோக்கங்கத்தினை மற்றும் செயற்பாடுகளை இனங்கண்டு செயற்படுத்த வேண்டியதுடன் சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய இலக்கம் பீஈடி/12 கொண்ட பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின் 9.2 பந்தி பிரகாரம் அங்கீகார ஆளணி மற்றும் ஒழுங்கமைப்பு வரிபடத்தை தயாரித்து பொது திறைசேரியின் பொது முயற்ச்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டிய போது அவ்வாறு செய்திருக்கவில்லை. | வோட்டர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனியின் அங்கீகார ஆளணி மற்றும் ஒழுங்கமைப்பு வரிபடத்தை பொது திறைசேரியின் பொது முயற்ச்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்ய தேவையான வழிகாட்டல்களை குறித்த பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 9.3.1 பந்தி பிரகாரம் கம்பனியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டமொன்றை தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் குறித்த அமைச்சின் மற்றும் பொது முயற்ச்சிகள் திணைக்களத்தின் பரிந்துரையை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் அவ்வாறு பெற்றிருக்கவில்லை. | வோட்டர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டமொன்றை தயாரித்து அதனை வரிசை அமைச்சின் மற்றும் பொது முயற்ச்சிகள் திணைக்களத்தின் தேவையான பரிந்துரைகளை பெற்றுக் கொள்ள சமர்பிக்க எதிர்பார்க்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 ஆம் திகதிய இலக்கம் பீஈடீ/12 கொண்ட பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின் 5.1.1 பந்தி பிரகாரம் அனைத்து பொது முயற்ச்சிகளின் மூலமும் கூட்டிணைந்த திட்டமொன்றை தயாரிக்க வேண்டிய போதும் கம்பனியினால் 2021 திசெம்பர் 31 திகதியளவிலும் அவ்வாறான திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | வோட்டர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனியின் கூட்டிணைந்த திட்டம் பூர்த்தியாகாமைக்குக் காரணமாவது நாட்டில் இடம்பெற்ற ஊழஎனை தொற்று காரணமாக ஏற்பட்ட நிலையற்ற தன்மை, 80 கிளப் கழகத்தின் நிலைத்திருக்கும் தன்மை தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபை, வோட்டர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனி மற்றும் 80 கிளப் கழகத்திற்கு இடையில் எற்படுத்திக் கொள்ள வேண்டியுள்ள முத்தரப்பு இணக்கப்பாட்டை குறித்த ஆண்டினுள் பூர்த்தியாகாததனால் ஆகும். எனினும் மேற்குறிப்பிட்ட 80 கிளப் கழகத்தின் நிலைத்திருக்கும் தன்மை தொடர்ப குறித்த தரப்பினர்களிற்கு இடையில் இணக்கப்பாட்டிற்கு வந்ததன் பின்னர், வோட்டர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனியினால் ஒட்டர்ஸ் எக்வடிக் கழகம் மற்றும் 80 கிளப் நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 ஆம் திகதிய இலக்கம் பீஈடீ/12 கொண்ட பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 பந்தி மற்றும் 2014 பெப்ரவரி 11 திகதிய இலக்கம் 01/2014 கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை 5(2) பந்தி பிரகாரம் எதிர்பார்த்த வணிக இலக்குகள் உள்ளிட்ட கம்பனியின் வியாபார திட்டத்தின் அடிப்படையில் ஆண்டின் போது செயற்படுத்த | வோட்டர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனியின் ஆரம்ப கணக்காண்டான 2020/2021 ஆண்டிற்காக எதிர்பார்த்த வணிக இலக்குகள் மற்றும் கம்பனியின் வியாபாரத் திட்டத்தை ஆண்டு ஆரம்பத்தில் சமர்பிக்க தேவையான அடிப்படை தகவல்கள் மற்றும் ஒட்டர்ஸ் எக்வடிக் கழகத்தின் செயற்பாடுகள் மற்றும் நடத்தை தொடர்பாக போதிய புரிந்துணர்வும் இல்லாதிருந்ததுடன் மற்றும் அவ்வாண்டில் ஊழஎனை தொற்று காரணமாக ஏற்பட்ட நிதி வீழ்ச்சி | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | |
|---|---|
| எதிர்பார்த்த செயற்பாடுகள் உள்ளிட்ட செயல் நடவடிக்கை திட்மொன்று தயாரிக்கப்பட்டிருக்கவல்லை. | தொடர்பாக தெளிவான விளக்கமொன்று இருக்காததனாலும் மேற்குறிப்பிட்ட அறிக்கை தயாரிக்கப்படவில்லை. 2022 இறுதி ஆண்டிற்காக வோட்டர்ஸ் எஜ் ரிக்ரியேஷன் கம்பனியினால் அடைந்து கொள்ள எதிர்பார்கும் வணிக இலக்குகள் உள்ளிட்ட அறிக்கையொன்றை கம்பனி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. |